10.07.2025 S.C.No.138 of 2017 P.W.53 – Chandrasekaran

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A5 present. A6 absent and his absence condoned as u/s 317 Cr.P.C. petition filed and allowed.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.45 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: பொதுவாக விசாரணைக்காக அழைக்கப்பட்டு ஆஜரான நபரைக் குறித்து எந்தெந்த பதிவேடுகளில் பதிவிட வேண்டும்?

ப: வழக்கு நாட்குறிப்பு மற்றும் பொதுநாட்குறிப்பேடு.

கே: Woman missing FIR No.140/2015 தொடர்பான வழக்குக்கோப்பை (CD file) தாங்கள் பரிசீலனை செய்தீர்களா?

ப: பரிசீலனை செய்தேன்.

கே: FIR No.140/2015 தொடர்பான விசாரணையில் ஆஜரான நபர்கள் யார் யார் என்றால்?

ப: பழனி, புகழேந்தி, சரவணன், செந்தில், கோபி, ஆனந்தன் மற்றும் ஷமீல் பாஷா ஆகியோர்.

கே: ஷமீல் பாஷாவை எந்த தேதியில் விசாரணைக்காக அழைத்தார்கள் என்றால்?

ப: 16.06.2015 ம் தேதி அவராக ஆஜரானார்.

கே: அழைப்பு விடுத்தது யார்?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய SSI ரவி ஆம்பூர் நகர காவல்

நிலைய தலைமை காவலராக பணியாற்றியுள்ள சிவக்குமார் என்பவருக்கு சொன்னதின் பேரில் அவரால் சொல்லப்பட்டுள்ளது.

கே: உங்களுடைய Charge sheet ல் page No.4 ல் இரண்டாவது பாராவில் 3 ல் ஷமீல் பாஷா தானே பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்தார் என்று உள்ளதா என்றால்?

ப: அவரது மாமனார் கௌஷ் பாஷா மற்றும் ஜாகீர் அகமதுவால் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கே: மேற்கண்ட ஜாகீர் அகமது உங்களுடைய Charge Sheet–ன் படி யார் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள் ?

ப: ஜாகீர் அகமது ஆம்பூர் தவுகித் ஜமாத் நகர செயலாளர் ஆவார்.

கே: உங்களுக்கு முன்பாக இந்த வழக்கை புலன் விசாரணை செய்த ஆனந்தக்குமார் நீதித்துறை நடுவர் எண்.3, வேலூரில் கொடுத்த Section Alteration Memo, Dated 03.08.2015–ல் எந்த தேதியில் ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஆஜரானதாக குறிப்பிட்டிருக்கிறார் என்றால்?

ப: 15.06.2015 அன்று என்று குறிப்பிட்டுள்ளார்.

கே: நீங்கள் 16.06.2015 என்றும், உங்களுக்கு முன்பு புலன் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி வெவ்வேறான தேதிகளில் ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஆஜரானதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த Section Alteration Memo, dated 03.08.2015 para no.5 ல் எஸ்எஸ்ஐ ரவிதான் FIR No.140/2015–ல் Investigation officer

என்றும் அவர்தான் ஷமீல் பாஷாவை விசாரித்தார் என்றும் இருக்கிறதா என்றால்?

ப: இருக்கிறது.

கே: மேற்கண்ட அதே ஆவணத்தில் Para No.5 ல் கடைசி நான்கு வரிகளில் "He was kept in the Police Station on 15.06.2015" என்று உள்ளதா என்றால் ?

ப: உள்ளது.

கே: 15.06.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஏதேனும் ஒரு ஆவணத்தில் ஷமீல் பாஷா 15.06.2015 அன்று நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானதாக பதிவுகள் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அப்படியானால் தங்களுக்கு முன்பாக விசாரணை அதிகாரியாக இருந்த ஆனந்தகுமார் ஒரு பொய்யான தகவலை இந்த நீதிமன்றத்திற்கு கொடுத்திருக்கிறார் என்றால்?

ப: அவ்வாறு கொடுத்திருக்கிறார். விசாரணையில் தெரிந்தவரையில் அவர் அவ்வாறு கொடுத்திருக்கலாம்.

கே: அவ்வாறு தவறான தகவலை கொடுத்தது குறித்து தாங்கள் என்னென்ன ஆவணங்களை ஆய்வு செய்தீர்கள்?

ப: எந்த ஆவணங்களையும் பார்க்கவில்லை. ஆவணங்கள் ஏதும் இல்லை.

கே: 16.06.2015 ஷமீல் பாஷாவினுடைய மாமனார் கௌஷ் பாஷா ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஆஜர்படுத்தியதாக தாங்கள் கூறியிருக்கிறீர்கள், அது குறித்து எந்தெந்த ஆவணங்களில் பதிவிடப்பட வேண்டும்?

ப: பொதுநாட்குறிப்பேட்டில் பதிவிட வேண்டும்.

கே: அவ்வாறு பொதுநாட்குறிப்பேட்டில் பதிவிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: தங்களது 26.05.2017 அன்று நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட Charge sheet ல் பக்கம் 4 ல் முதல் பாராவில் அரியூர் காவல் நிலைய எஸ்எஸ்ஐ ரவிச்சந்திரன் குறித்து குறிப்பிட்டிருக்கிறீர்கள், அவருக்கும் ஷமீல் பாஷாவிற்கும் என்ன தொடர்பு என்பது குறித்து ஆவணம் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: ஆவணங்கள் ஏதும் இல்லை.

கே: அரியூர் காவல் நிலைய எஸ்எஸ்ஐ ரவிச்சந்திரன் ஷமீல் பாஷாவின் செல் எண்ணை காணாமல் போன பவித்ரா கணவரான பழனிக்கு கொடுத்ததாக குறிப்பிட்டிருக்கிறீர்கள், இந்த நிலையில் மேற்கண்ட ரவிச்சந்திரனுக்கு ஷமீல் பாஷாவின் செல் எண் எப்படி தெரியும் என்று கேட்டு அது குறித்து விசாரணை செய்து ஆவணம் சமர்ப்பித்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: 16.06.2015 அன்று எஸ்எஸ்ஐ ரவியால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஷமீல் பாஷாவிடமிருந்து ஏதேனும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா?

ப: வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கே: ஷமீல் பாஷாவின் வாக்குமூலத்தை யார் பதிவு செய்துள்ளார்கள்?

ப: எஸ்எஸ்ஐ ரவி ஆவார்.

கே: 16.06.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆவணங்களில் ஷமீல் பாஷா நிலையத்தில் இருந்ததாக ஏதேனும் நிலைய ஆவணத்தில் பதிவுகள் உள்ளதா?

ப: இல்லை.

கே: FIR No.140/2015 வழக்கின் CD file–ல் 16.06.2015 அன்று ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்ததாக பதிவுகள் உள்ளனவா?

ப: இல்லை.

கே: மேற்கண்ட குற்ற எண்ணில் ஷமீல் பாஷாவிடம் எஸ்எஸ்ஐ ரவியால் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் கு.வி.மு.ச. பிரிவு 161(3) வாக்குமூலத்தில் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக நேரடி குறிப்பு ஏதேனும் உள்ளனவா, காட்டுங்கள்?

ப: ஷமீல் பாஷாவின் வாக்குமூலம் உள்ளது. ஆனால் அது கு.வி.மு.ச. பிரிவு 161 (3) வாக்குமூலமாக இல்லை. ஆனால் வழக்குக்கோப்பில் பதிவுகள் ஏதும் இல்லை.

கே: வாக்குமூலத்தில் எந்த இடத்தில் வைத்து விசாரிக்கப்பட்டது என்று உள்ளதா, எந்த தேதியில் விசாரித்ததாக உள்ளது?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வரச்சொல்லி என்று உள்ளது. ஆனால், ஷமீல் பாஷாவின் கையெழுத்திற்கு கீழே தேதி இல்லை.

கே: 16.06.2015 அன்று எத்தனை மணி முதல் எத்தனை மணிவரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஷமீல் பாஷா இருந்தார் என்ற குறிப்பு குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பிலோ அல்லது பொதுநாட்குறிப்பிலோ உள்ளதா?

ப: இல்லை.

கே: 17.06.2015 ம் தேதி ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்தாக பொதுநாட்குறிப்பில் பதிவுகள் உள்ளனவா?

ப: இல்லை.

கே: 17.06.2015 அன்று ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்ததாக குற்ற எண் 140/2015 CD file–ல் பதிவுகள் உள்ளதா?

ப: இல்லை.

கே: When there is no entry in the CD file of Crime No.140/2015 regarding the availability of Shameel Basha in Police Station from 15.06.2015, 16.06.2015 and 17.06.2015 I say that there is no illegal custody of Shameel Basha in any manner known to law?

ப: There are no entries in CD file of Crime No.140/2015. But, it was mentioned in the witnesses statements.

கே: Who has written that witnesses statements in Crime No.140/2015?

ப: SSI Tr.Ravi has recorded the statements.

கே: Whether SSI Tr.Ravi has obtained witnesses signatures in the statements said to be recorded?

ப: Yes. In Shameel Basha statement, SSI Tr.Ravi has obtained signature.

கே: You already stated a list of witnesses in Crime No.140/2015 and statements were recorded by SSI Tr.Ravi whether that statements recorded by Ravi from the witnesses except the suspect Shameel Basha have been produced before this Hon'ble Court?

ப: Produced.

கே: Kindly see the copy of the CD file (Ex.P.37) of Crime No.140/2015 tell which statement is saying that Shameel Basha was in Pallikonda Police Station on 15.06.2015, 16.06.2015 and 17.06.2015?

ப: No statement is saying.

கே: Kindly see the original CD file in Crime No.140/2015 and tell whether the Shameel Basha was kept in Pallikonda Police Station on 15.06.2015, 16.06.2015 and 17.06.2015?

ப: I have not seen the original CD file in Crime No.140/2015.

கே: Where there is no entries in all the documents about the availability of Shameel Basha in Pallikonda Police Station in connection with Crime No.140/2015 I say the Shameel Basha was not in Police Station on 15.06.2015, 16.06.2015 and 17.06.2015?

ப: Correct. But in the statement of Shameel Basha he was in Pallikonda Police Station on 16.06.2015. For 17.06.2015 also there is no document to that effect.

கே: Now you see the CD file in Crime No.140/2015 whether Shameel Basha was there in Pallikonda Police Station on 18.06.2015?

ப: I have seen the Xerox copy of the CD file in Crime No.140/2015 there is no such documents found.

கே: On 19.06.2015 particularly by 13.00 hours Ghouse Basha who is the father in law of Shameel Basha have taken Shameel Basha by giving a written statement (Ex.D.11) particularly in the 2nd page (Ex.D.10) "இன்று 19.06.2015 ம் தேதி விசாரணைக்கு வந்த நான் விசாரணையில் மேற்படி பவித்ராவை கூட்டிப்போய் வீடு வாடகைக்கு எடுத்து தங்க வைத்து அவரை தனியாக அனுப்பியது தவறுதான்"?

ப: ஆம் உள்ளது.

கே: In the bottom of the 2nd page in Bindover note dated 19.06.2015 Ghouse Basha have stated as follows "19.06.2015 ம் தேதி பகல் 13.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன்" என்று உள்ளதா?

ப: It has been mentioned as stated above.

கே: Kindly tell from 13.00 hours on 19.06.2015 under whose control Shameel Basha was there?

ப: Shameel Basha was under the control of his Father in law namely Ghouse Basha.

1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.10 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.07.10 17:35:59 +0530